## ஹிங்குரக்கொட பிரதேச சபை

## பொலன்னறுவை மாவட்டம்

----------------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 01 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 11 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 30 திகதி பிரதேச சபையின் செயலாளரிற்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

நிதிக் கூற்றுக்களானவை ஹிங்குரக்கொட பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதிய முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக் கூற்றுகளின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களின் பெறுமதி ரூபா 308,518,884 ஆகக் காணப்பட்டதுடன் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் குறிப்பிடப்பட்டுள்ள 30 விடயங்கள் தொடர்பாக அவற்றின் பெறுமதி குறிப்பிடப்படாமையால் மற்றும் பல வருட காலமாக காணிகள் மற்றும் கட்டடங்களினால் பெறுமதி மதிப்பீடு செய்து அப்பெறுமதியினை கணக்கீடு செய்யப்படாமையால் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணிகள் மற்றும் கட்டடங்களின் பெறுமதி குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் பாதைகள் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டதிற்காக வழங்கியிருந்த கடன் தொகையில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 25,469,046 இற்கான கடன் மீதி ஒன்று காணப்பட்ட போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 21,178,137 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ஐந்தொகையில் கடன் மூலதனம் ரூபா 4,290,911 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் பாதைகள் பராமரிப்பு பொறித்தொகுதி கொள்வனவு செய்வதற்காக பெற்றுக் கொண்ட கடன் தொகைக்காக 2011 ஆண்டின் நிலுவை கடன் வட்டி மற்றும் தவணைப் பணம் ஆகிய ரூபா 909,789

இற்கான மீதி ஐந்தொகையில் கடன் கொடுத்தோரின் கீழ் காட்டப்படாமையால் ஆண்டிற்கான நடைமுறை பொறுப்புக்கள் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து 2012 ஆண்டின் போது பெற்றுக் கொண்ட கடன் தொகை கடன் பதிவேட்டின் பிரகாரம் 2013 வருட இறுதியில் நிலுவை வட்டி மற்றும் தவணைப் பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,568,764 தொகை எனினும், கடன் கொடுத்தோர் என ரூபா 1,714,435 தொகை காட்டப்பட்டிருந்தமையால் கடன் கொடுத்தோர்களின் பெறுமதி ரூபா 145,671 இனால் மிகையாக காட்டப்பட்டுள்ளது.

(உ) 2013 ஆண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவைக் கடன், கடன் தவணை மற்றும் வட்டி பெறுமதி ரூபா 5,265,105 தொகை எனினும் கடன் கொடுத்தோரின் பெறுமதி என ரூபா 6,214,335 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் கடன் கொடுத்தோரின் பெறுமதி ரூபா 949,230 இனால் மிகையாக காட்டப்பட்டுள்ளது.

(ஊ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் ஹிங்குரக்கொட சிறுவர் விளையாட்டுத் திடல் அமைந்துள்ள புதிய சந்தை வளவின் பெறுமதி மதிப்பீட்டுத் தொகை என ரூபா 9,200,000 தொகை காட்டப்பட்டிருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் அப் பெறுமதி என ரூபா 8,058,150 என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 1,141,850 இற்கான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 371,292,168 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

--------------------------------------------

அலுவலர்களுக்கு செலுத்தியிருந்த ரூபா 84,641 இற்கான முற்பண மீதி ஒன்று பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இந்த மீதி முன்னைய ஆண்டுகளின் போதும் தீர்க்கப்படாமல் முன் கொண்டுவரப்பட்டிருந்தது.

1.3.4 இணக்கமின்மை

-------------------------

கீழ்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மாணங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண(விஷேட ஏற்பாடுகள்) சட்டம் | மாதாந்த மொத்த சம்பளம் ரூபா 25,000 இனை மிகைக்கும் ஊழியர்களுக்கு செலுத்தும் ஊதியத்தில் ரூபா 25 இனாலான முத்திரைக் கட்டணம் ஒன்று அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். மீளாய்வாண்டின் போது 67 ஊழியர்கள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 9,750 |

முத்திரைக் கட்டணத்தை அறவீடு செய்து உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி

----------------------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | விதி 65 | கைத்தொழில் வரி செலுத்த தவறுவோரின் பட்டியல் ஒன்று தயாரித்திருக்கவில்லை. |
| (ii) | விதி 67 | வருடாந்தம மேற்கொள்ளப்படும் கணிப்பீடு ஒன்றின் மூலம் வர்த்தக நிலையங்கள் மற்றும் கைத்தொழில் நிலையங்களின் எண்ணிக்கைகள் மிகைத்தல் மற்றும் குறைதல் அடங்கும் விதமாக தயாரிக்கப்படும் பட்டியல் ஒன்றின் அடிப்படையில் வர்த்தக அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் கைத்தொழில் வரி அறவிடப்பட வேண்டும் எனினும் மீளாய்வாண்டு தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |
| (iii) | விதி 203,214 மற்றும் 218 | சபையின் ஆதனங்கள் தொடர்பாக முழுமையான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(இ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

----------------------------------------------------------

| | |
|---|---|
| நி.பி. 571(2) | வைப்புச் செய்யப்பட்ட காலம் 02 வருடத்தை மிகைத்துள்ள ரூபா 651,461 இற்கான காலம் கடந்த வைப்புக்களை உரிமையளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,588,639 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,289,651 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

------------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

-------------------------------------------------------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவா றான வருமானம் | திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரி | 2,564 | 1,769 | 2,080 |
| (ii) | வாடகை | 13,009 | 4,533 | 1,168 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,424 | 3,530 | - |
| (iv) | பிடியாணை மற்றும் தண்டம் | 8,700 | 6,154 | 5,697 |
| (v) | ஏனைய வருமானங்கள் | 14,429 | 11,948 | 15,466 |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பயன்படுத்தப்படாத / குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

(அ) தரைப் படையினால் பயன்படுத்தப்பட்டு பின்னர் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த கப் வண்டி ஒன்று சபை வளவில் பல வருட காலமாக நிறுத்தப்பட்டுக் காணப்பட்டது. இந்த கப் வண்டியினை திருத்த வேலை மேற் கொள்ளப்பட்டு பயன்படுத்துவதற்கு அல்லது முறைப்படி அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 225,000 பெறுமதி ஒன்று குறிப்பிட்டுள்ள திருத்த வேலைகளின் பின்னர் பயன்படுத்தக்கூடிய நான்கு சில்லு டிரக்டர் வண்டி ஒன்று சுமார் 05 வருட காலம் முதல் பயனபடுத்தப்படாமல் சபை வளவில் நிறுத்தப்பட்டு காணப்பட்டது.

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

(அ) முன்னைய ஆண்டுகளின் போது ஹிங்குரக்கொட பிரதேச சபைக்கு உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் மல வடிகால் அமைப்பு மற்றும் உடல் ஆரோக்கியச் செயற்திட்டம், வீதிகள் பராமரிப்பு பொறித் தொகுதிகள் கொள்வனவு செய்யும் செயற்திட்டம் மற்றும் வீதிகள் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்(சிவில் வேலைகள்) போன்ற செயற்திட்டங்களுக்காக வழங்கியிருந்த கடன் தொகைகளை தொடர்பாக தவணைப் பணங்கள் மற்றும் வட்டித் தொகை முறையாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல் வழங்கியிருந்த கடனை திருப்பிச் செலுத்தும் முன்னேற்றம் பற்றி மற்றும் கடன் தொகைகளை திருப்பி செலுத்தும் சாத்தியக் கூறு தொடர்பாக கவனம் செலுத்தாமல் தொடர்ச்சியாக சபைக்கு கடன் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2014 ஆண்டின் போது நடைபெற்ற பண்டக் கணிப்பீட்டின் போது 90 வகையான பண்டங்களின் பற்றாக்குறை ஒன்று அவதானிக்கப்பட்டிருந்த போதும் அப்பற்றாக்குறைகள் தொடர்பாக கவனம் செலுத்தி பிரதேச சபை விதி 204 இன் பிரகாரம் அவற்றிற்கு பொறுப்பான அலுவலர்களிடம் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(இ) மின்னேரிய நூலகத்தில் 2006 ஆண்டிற்கு முன்னர் அங்கத்தவர்களினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்த இதுவரை திருப்பி ஒப்படைக்கப்படாத புத்தகங்களின் எண்ணிக்கை 692 ஆகும். புத்தகங்களை பெற்றுச் சென்ற அங்கத்தவர்களின் புத்தகங்களை திருப்பி பெறுவதற்காக அல்லது நட்டத்தை அறவீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) சுமார் 07 வருட காலம் முதல் செயற்படாமல் காணப்படும் வங்கி கணக்கு ஒன்று தொடர்பாக வங்கிக் கூற்றின் பிரகாரம் அதனது மீதி ரூபா 1,724 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அக் கணக்கின் மீதி ரூபா 14,168 என காட்டப்பட்டிருந்தது. இந்த வித்தியாசத்திற்கான காரணத்தை வெளிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. இந்த வங்கிக் கணக்கு தொடர்பாக வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

சபையின் வருமான மூலங்களை முறைப்படி எதிர்வுகூறல் மேற்கொள்ளப்படாமல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டிற்கான உள்ளவாறான வருமானம் மற்றும் மதிப்பீட்டு வருமான விடயங்களிடையே நூற்றிற்கு 20 முதல் நூற்றிற்கு 68 வரை முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

--------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் முறையான குப்பை முகாமைத்துவமொன்று அமுல் நடத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள் முறைசாரா விதமாக காட்டுப் பகுதிக்கு குவிக்கப்படுகின்றது. அக் குப்பைகள் மிருகங்களினால் உணவாக பயன்படுத்தப்பட்டுள்ளமையால் அவ் உயிர் ஜீவிகளின் வாழ்க்கைக்கு சவால் ஏற்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது.

3.5 அகக் கணக்காய்வு

------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபையில் அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் உள்ளூராட்சி திணைக்களத்தினால் போதியளவு கணக்காய்வு ஒன்று சபையில் செயற்படுத்தியிருக்கவில்லை.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கணக்காய்வு

(இ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) வாகனப் பாவனை